# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)

<u>வாக்காளர் அடையாள அட்டை பற்றி பொது விழிப்புணர்வுப் பிரச்சாரம்</u>

**பெருநகர இலண்டன் ஆணையம் என்போர் யார்?**

இலண்டன் சிட்டி ஹால் என்றும் அறியப்படும் பெருநகர இலண்டன் ஆணையமானது (GLA) பெருநகர இலண்டன் மற்றும் இலண்டன் நகரத்தை ஆட்சி எல்லையாகக் கொண்ட இலண்டன் பிராந்திய அரசாங்கம். GLA இலண்டன் மேயர் மற்றும் இலண்டன் சட்டசபை ஆகியவற்றால் ஆனது.

**Shout Out UK என்றால் என்ன?**

Shout out UK (SOUK) என்பது ஒரு பக்கச்சார்பற்ற ஆக்கபூர்வமான சமூக நிறுவனமாகும், இது இளைஞர்களிடையே ஊடகம் மற்றும் அரசியல் அறிவை உயர்த்துவதில் சிறப்பு கவனம் செலுத்துகிறது. SOUK ஆனது 2020-2024 காலப் பகுதியில் இலண்டன் வாக்காளர் பதிவு வாரத்திற்கான GLA ஆல் ஒருங்கிணைக்கப்பட்ட கொண்டு சேர்க்கும் கூட்டாளியாக உள்ளது.

பாகுபாடில்லாத வாக்காளர் அடையாள பொது விழிப்புணர்வு பிரச்சாரத்துக்கு, அனைத்து நேரங்களிலும் பாகுபாடின்மையை உறுதிசெய்ய சமூக ஊடகச் சொத்துக்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சமூக ஊடகப் பிரதி உள்ளிட்ட அனைத்து மூலவளங்களையும், இலண்டன் முழுவதிலுமுள்ள சமூகங்கள் மற்றும் கூட்டாளர்களுடனும் மற்றும் கல்வி அமைப்புகளுடனும் கல்விசார் தகவல்களை SOUK விளம்பரப்படுத்தி பகிர்கிறது.

**வாக்காளர் அடையாள அட்டை பொது விழிப்புணர்வுப் பிரச்சாரம் என்றால் என்ன?**

நாம் வாக்களிக்கும் விதத்திலும் யாருக்கு வாக்களிக்கலாம் என்பதிலும் தேர்தல் சட்டம் (2022) மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

எனவே, 2023 ஜனவரி முதல், பெருநகர இலண்டன் ஆணையமும் சிவில் சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அனைத்து இலண்டன் பெருநகர தேர்தல் சேவை களின் பலதரப்பட்ட கூட்டணியும் இணைந்து ஒரு பாரபட்சமற்ற பொது விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்துகின்றன. இந்த பிரச்சாரம் இந்த வரலாறு காணாத மாற்றங்கள் குறித்து மாற்றங்களைப் பற்றி தகுதியுள்ள அனைத்து லண்டன்வாசிகளுக்கும், குறிப்பாக பதிவு செய்யப்படாத மற்றும் அனைத்து பின்னணியைச் சேர்ந்த குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட இலண்டன்வாசிகளுக்கு, தெரிவிக்கும் நோக்கத்தை கொண்டுள்ளது.

அவையாவன:

- பாராளுமன்ற / பொதுத் தேர்தல்கள், உள்ளூர் / பெருநகர தேர்தல்கள் மற்றும் லண்டன் மேயர் / இலண்டன் சட்டமன்றத் தேர்தல்களில் நேரில் வாக்களிக்க கட்டாய புகைப்பட அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.
- சில EU இலண்டன்வாசிகளின் வாக்களிக்கும் உரிமைகளில் மாற்றங்கள்
- அஞ்சல் மற்றும் பதிலி வாக்களிப்புக்கான விண்ணப்பங்களில் மாற்றங்கள்

GLA - தலைமையிலான பொது விழிப்புணர்வுப் பிரச்சாரமானது தேர்தல் ஆணையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, Shout Out UK (SOUK) மூலம் வழங்கப்படுகிறது. வருடாந்திர இலண்டன் வாக்காளர் பதிவுசெய்தல் வார மாதிரியை உருவாக்கி, இந்த மாற்றங்களால் விகிதச் சமனற்ற முறையில் பாதிக்கப்படும் குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட சமூகங்களுடன் தகவல்களையும் கல்விசார் தகவல்களையும் GLA மற்றும் SOUK இணைந்து வடிவமைத்துள்ளன. பங்குதாரர்களின் ஒரு பரந்த, பான்-லண்டன் கூட்டணியின் ஆதரவுடன் பொருட்கள் மற்றும் செயல்பாடுகள் பகிரப்பட்டு ஆன்லைனிலும் ஆஃப்லைனிலும் நடைபெறும்.

இதற்கிணை யாக, இந்த நடவடிக்கை யை முழுமை யாக்கும் விதமாக, GLA வாக்காளர் அடை யாள அட்டை விழிப்புணர்வுப் மானியத் திட்டங்களை வெ ல்லக்கூடிய கே ட்பவர்களுக்கு, நம்பிக்கை யான சமூக அமை ப்புகளில் நடவடிக்கை அளிக்கப்படும். இல் உள்ள GLA  ஜனநாயக மை யத்தை ப் பற்றிய கூடுதல் தகவலை நீங்கள் இங்கே காணலாம் https://registertovote.london/

### இலண்டன் வாக்காளர் பதிவு வாரம் (LVRW) என்றால் என்ன?

இது இலண்டன்வாசிகளுக்கு குறிப்பாக குறைவாகப் பதிவுசெய்யப்பட்ட மற்றும் குறைவாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படும் இலண்டன்வாசிகளை வாக்களிப்பதற்குப் பதிவுசெய்வதற்கு ஊக்குவித்து ஆதரவுவழங்குவதற்காக பெருநகர இலண்டன் ஆணையம், ஒரு விநியோகப் பங்காளரான லண்டன் வோட்டர் ரெஜிஸ்ட்ரேஷன் பார்ட்னர்ஷிப் மற்றும் ஒரு பரந்த கூட்டமைப்புடன் கூட்டமையாக நடத்தப்படும் ஒரு வருடாந்திர, கட்சி அரசியல் சார்பற்ற, தேர்தல் சார்பற்ற திட்டமாகும்.

### நாங்கள் ஏன் இதைச் செய்கிறோம் / இலண்டன்வாசிகள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள்?

தேர்தல் சட்டம் (2022) கொண்டு வந்துள்ள சனநாயக உரிமைகளில் மாற்றங்கள் ஏற்கெனவே குறைவாகப் பதிவுசெய்துள்ள மற்றும் குறைவான பிரதிநிதித்துவமுள்ள இலண்டன்வாசிகளுக்குக் கணிசமான தடைகளை ஏற்படுத்துகின்றது. இவர்களில் பலர் கோவிட் பெருந்தொற்றினால் விகிதச் சமனின்றி பாதிக்கப்பட்டு அன்றாடச் செலவினால் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

இலண்டன் ஏற்கனவே ஐக்கிய இராச்சியப் பிராந்தியங்கள் மற்றும் நாடுகளில் குறைந்த வாக்காளர் பதிவு விகிதங்களைக் கொண்டுள்ளது.
https://data.london.gov.uk/dataset/survey-of-londoners-2021-22 இல் மேலும் அறியுங்கள்

ஜோசெப் ரவுன்ட்ரீ அறக்கட்டளை (2022 பிப்ரவரி), ட்ரஸ்ட் போ தி லண்டன் அன்ட்தி3மில்லியன் ("இலண்டன் குரல்கள்: முழுப் பங்கேற்புக்கான பயணம்", டிசம்பர் 2021) மற்றும் GLA வாக்கெடுப்பு (2022 ஆகஸ்ட் மற்றும் 2023 மார்ச்) ஆகியவை வாக்களிக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டைய க் கொண்டிருக்கக்கூடிய மக்கள் தொகை மற்றும் சமூகங்களை அடையாளம் காட்டுகிறது. இவையாவன :

- இளம் இலண்டன்வாசிகள் (வயது 18-25)
- ஐரோப்பிய ஒன்றிய இலண்டன்வாசிகள் உட்பட கறுப்பின, ஆசிய, சிறுபான்மை இன மற்றும் புலம்பெயர்ந்த இலண்டன்வாசிகள்
- காது கேளாதோர் மற்றும் ஊனமுற்ற இலண்டன்வாசிகள்
- பழைய இலண்டன்வாசிகள்
- LGBTQIA+ இலண்டன்வாசிகள், குறிப்பாக டிரான்ஸ் மற்றும் பைனரி அல்லாத இலண்டன்வாசிகள்
- குறைந்த வருமானம் கொண்ட இலண்டன்வாசிகள்
- சமூக மற்றும் தனியார் இடங்களில் வாடகைக்கு இருக்கும் இலண்டன்வாசிகள், மற்றும் வீடற்ற இலண்டன்வாசிகள் உட்பட பாதுகாப்பற்ற வீடுகளில் இலண்டன்வாசிகள்

### வாக்களிக்க புகைப்பட அடையாளத்தைச் சமர்ப்பிப்பது குறித்து நான் கவலைப்படுகிறேன், நான் யாரிடம் பேசலாம்?

GLA ஆனது வாக்களிக்க புகைப்பட அடையாளயை அறிமுகப்படுத்தவில்லை, அது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் சமத்துவத் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்குமான அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது.

நீங்கள் ஒரு சிவில் சமூக அமைப்பாக இருந்தால், விழிப்புணர்வைப் பரப்புவதற்கும் எங்கள் வளங்களை விநியோகிப்பதற்கும் எங்களுக்கு உதவ விரும்பினால், முடிந்தவரை பல இலண்டன்வாசிகளை நாங்கள் சென்றடைவதை உறுதிசெய்ய democracy@london.gov.uk. ஊடாக தயவுசெய்து GLA ஜனநாயக பங்கேற்புக் குழுவை அணுகவும்.

வாக்களிக்க புகைப்பட அடையாளத்தைச் சமர்ப்பிப்பது குறித்த கவலைகளை நீங்கள் தெரிவிக்க விரும்பினால், நீங்கள் correspondence@levellingup.gov.uk-க்கு மின்னஞ்சல் செய்யலாம் அல்லது Department for Levelling Up, Housing and Communities, 2 Marsham Street, London, SW1P 4DF-க்கு எழுதலாம்

## <u>நேரில் வாக்களிக்க புகைப்பட அடையாளத்தைக் காட்ட வேண்டிய தேவை</u>

### நேரில் வாக்களிக்க எந்த வடிவிலான புகைப்பட அடையாளம் (ஃபோட்டோ ஐடி) ஏற்கப்படும்?

வாக்களிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாளம் எந்த வகை அடையாள அட்டையாகவும் இருக்கக்கூடாது. இலண்டன்வாசிகள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை வடிவங்களில் **ஒன்றை** வைத்திருக்கவும் வாக்களிக்கத் தேவையான அடையாளச் சான்றாகக் காட்டவும் வேண்டியிருக்கும்:

- ஒரு ஐக்கிய இராச்சிய கடவுச்சீட்டு
- ஐரோப்பிய பொருளாதாரப் பகுதி (EEA) அரசினால் அல்லது ஒரு காமன்வெல்த்

நாட்டினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு
- EEA அரசினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
- ஐக்கிய ஓட்டுநர் உரிமம் (புகைப்படத்துடன், காகித உரிமங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது)
- சேனல் தீவுகள், மேன் தீவு அல்லது ஒரு EEA மாநிலம் வழங்கிய ஒரு ஓட்டுநர் உரிமம்
- ஒரு பயோமெட்ரிக் குடியேற்ற ஆவணம்
- வயதுச்சான்று தரநிலைகள் திட்ட ஹோலோகிராம் கொண்ட ஓர் அடையாள அட்டை (ஒரு பாஸ் அட்டை)
- ஒரு பாதுகாப்பு அமைச்சகப் படிவம் 90 (பாதுகாப்பு அடையாள அட்டை)
- வயதானவருக்கான பஸ் பாஸ், ஊனமுற்றவருக்கான பஸ் பாஸ், Oyster 60+ அட்டை, ஃபரீடம் பாஸ்
- ஒரு ப்ளூ பெட்ஜ்
- இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழ்.

புகைப்பட அடையாள அட்டையின் **அசல்** வடிவத்தை உங்களுடன் வாக்குச்சாவடிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். ஆவணங்களின் ஃபோட்டோகாப்பிகள் மற்றும் உங்கள் தொலைபேசியில் உள்ள புகைப்படங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

காலாவதியான புகைப்பட அடையாள அட்டையின் புகைப்படத்தின் மூலம் அடையாளம் காணக்கூடியதாக இருப்பின், அவற்றைப் பயன்படுத்தலாம். ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து வகையான புகைப்பட அடையாள அட்டைகளையும் பற்றிய கூடுதல் தகவல்கள் தேர்தல் ஆணையத்தின் https://www.electoralcommission.org.uk/voting-and-elections/voter-id இணையதளத்தில் உள்ளன.

அவை இந்தப் பட்டியலில் இல்லையெனில், மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட பிற புகைப்பட அடையாள அட்டைகள் வாக்களிப்பதற்காக அடையாளச் சான்றாக **ஏற்கப்பட மாட்டாது.**

**வாக்களிப்பதற்கு ஒரு ஏற்கத்தக்க புகைப்பட அடையாள அட்டையைப் பெறுவதில் கூடுதல் தகவல்களையும் உதவியையும் நான் எங்கு பெறமுடியும்?**

தேர்தல் ஆணையம் தேசிய வழிகாட்டுதலை https://www.electoralcommission.org.uk/voting-and-elections/voter-id. இல் வெளியிட்டுள்ளது

பாகுபாடில்லாத GLA வாக்காளர் அடையாள அட்டை பிரச்சார மூலவளங்கள் குறித்தும் GLA சனநாயக மையத்தில் ஈடுபடுவது எப்படி என்ற கூடுதல் விபரங்களை https://registertovote.london/ இல் காணலாம்

நீங்கள் https://www.gov.uk/browse/driving/driving-licences இல் உங்கள் ஓட்டுநர் உரிமத்துக்கு விண்ணப்பிக்கலாம், அதைப் புதுப்பிக்கலாம் அல்லது திருத்தலாம், காணலாம் அல்லது பகிரலாம்
நீங்கள் https://www.gov.uk/apply-renew-passport இல் பிரிட்டிஷ் பாஸ்போர்ட்டுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். உங்கள் உள்ளூர் தபால் நிலையத்திலிருந்து பாஸ்போர்ட் விண்ணப்ப படிவங்களை நீங்கள் பெற்றுக்கொண்டு (உங்கள் கிளையை https://www.postoffice.co.uk/branch-finder இல் கண்டறியவும்) தபால் மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது Post Office Check and Send சேவையைப் பயன்படுத்தலாம் (மேலதிக தகவல் பெற https://www.gov.uk/how-the-post-office-check-and-send-service-works இனை அணுகவும்).

இங்கே 60+ London Oyste புகைப்பட அட்டையைப் பற்றி மேலும் அறியலாம் https://tfl.gov.uk/fares/free-and-discounted-travel/60-plus-oyster-photocard

நீங்கள் https://www.gov.uk/apply-blue-badge இல் ப்ளூ பேட்ஜுக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது அதைப் புதுப்பிக்கலாம். ப்ளூ பேட்ஜ் திட்டம் பற்றிய கேள்விகளுக்கு இல் உங்கள் உள்ளூர் கவுன்சிலைத் தொடர்புகொள்ளுங்கள் https://www.gov.uk/blue-badge-scheme-information-council .

உங்கள் உள்ளூர் குடிமக்கள் ஆலோசகராலும் உதவ முடியும். உங்கள் உள்ளூர் கிளையைக் https://www.citizensadvice.org.uk/ இல் கண்டறியுங்கள்

நீங்கள் இலவச வாக்காளர் ஆணைய சான்றிதழுக்கு https://www.gov.uk/apply-for-photo-id-voter-authority-certificate இல் விண்ணப்பிக்கலாம்.

## நேரில் வாக்களிக்க புகைப்பட அடையாள அட்டையை காண்பிக்க வேண்டிய தேவை எப்போது தொடங்கும்?

2023 மே முதல் இங்கிலாந்தில் நடக்கும் உள்ளூர் தேர்தல்களுக்கு இந்த புகைப்படவாக்காளர் அடையாள அட்டைக்கான தேவை பொருந்தும். இது முதன்முறையாக 2024 மே மாதம் நடைபெறும் இலண்டன் மேயர் மற்றும் இலண்டன் அசெம்பிளி தேர்தல்களின் போது பான்-லண்டன் தேர்தல்களுக்குப் பொருந்தும். இங்கிலாந்து 4 பாராளுமன்ற/ பொதுத் தேர்தல்களுக்கான தேவைப்பாடு 2023 அக்டோபர் 5 ஆம் தே திக்குப் பின்னரான தேர்தல்களுக்கு அமலுக்கு வரும். ஆனால் அது 2023 மே மாதத்திற்குப் பின்னர் நடை பெறும் எந்தவொரு தனியான பாராளுமன்ற இடைத்தேர்தலுக்கும் பொருந்தும்.

## ஏனைய வகைய அடையாள அட்டைகள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை?

ஏற்றுக்கொள்ளப்படும் புகைப்பட அடையாள அட்டை வடிவங்களாக உள்ள ஆவண வகைகள் சட்டத்தில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன . இவை ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

கவனத்தில் எடுக்கப்படும் புகைப்பட அடையாள அட்டையின் எந்த வடிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பது பற்றிய கூடுதல் தகவல்களை ஐக்கிய இராச்சிய அரசாங்கம் வழங்கியுள்ளது. நீங்கள் அவற்றை இல் பார்க்கலாம்

https://www.gov.uk/government/publications/voter-identification-at-polling-stations-and-the-new-voter-card/protecting-the-integrity-of-our-elections-voter-identification-at-polling-stations-and-the-new-voter-card

## நான் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் வாக்குச் சாவடிக்குச் சென்றால் என்ன நடக்கும்?

நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டையின்றி வாக்களிக்க வாக்குச் சாவடிக்குச் சென்றால், உங்களுக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படாது, ஏற்றுக்கொள்ளப்பட்ட

வடிவத்திலான புகைப்பட அடையாளத்தின் அட்டையுடன் மீண்டும் வர வேண்டியிருக்கும்.

நீங்கள் மீண்டும் வந்து அசல் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டையைச் சமர்ப்பித்தால், நீங்கள் வாக்களிக்க முடியும்.

### நான் வாக்களிக்க புகைப்பட அடையாளயைக் காட்ட விரும்பவில்லை என்றால் என்ன செய்வது?

வாக்குச் சாவடியில் புகைப்பட அடையாளத்தைக் காட்டாமல் இருக்க நீங்கள் விரும்பினால், தபால் மூலமாகவோ அல்லது பதிலாள் மூலமாகவோ வாக்களிக்க விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் விண்ணப்பிப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு புகைப்பட அடையாள அட்டை தேவையில்லை. நீங்கள் மாற்றாள் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கும் போது இது தேவையில்லை, ஆனால் உங்கள் மாற்றாள் உங்கள் சார்பாக வாக்களிக்கும்போது, வாக்குச் சாவடியில் தனது ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டையைக் காட்ட வேண்டும்.

### எனது புகைப்பட அடையாள அட்டையில் என்ன விவரங்கள் சரிபார்க்கப்படும்?

வாக்குச் சாவடியில் மேற்கொள்ளப்படும் புகைப்பட அடையாள அட்டைச் சரிபார்ப்பு, உங்கள் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள பெயரும், வாக்காளர் பதிவேட்டில் உள்ள உங்கள் பெயரும் ஒன்றா என்பதை உறுதிப்படுத்துவதாகும். உங்கள் அடையாளத்தில் உள்ள பாலின அடையாளம், முகவரி அல்லது தேசிய இனம் என்பவற்றைப் பணியாளர்கள் சரிபார்க்க மாட்டார்கள்.

### வாக்காளர் பதிவேட்டில் உள்ள பெயரும் எனது புகைப்பட அடையாள அட்டையில் உள்ள பெயரும் பொருந்தவில்லை என்றால் நான் என்ன செய்வது?

உங்கள் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள பெயர் வாக்காளர் பதிவேட்டில் உங்கள் பெயரை விட வித்தியாசமாக இருந்தால், நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யலாம்:

- பெயர் மாற்றத்திற்கான சான்றாக உங்களுடன் அதிகாரப்பூர்வ ஆவணத்தை கொண்டு வரலாம், உதாரணமாக திருமணச் சான்றிதழ் (அத்துடன் உங்கள் புகைப்பட அடையாள அட்டை)
- நீங்கள் வாக்களிக்க பதிவு செய்துள்ள பெயர் மற்றும் சமீபத்திய புகைப்படத்தைப் பயன்படுத்தி இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம் https://www.gov.uk/apply-for-photo-id-voter-authority-certificate
- அல்லது வாக்காளர் பதிவேட்டில் உங்கள் பெயரை மாற்றுவதற்காக உங்கள் உள்ளூர் தேர்தல் சேவைக் குழுவை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information

### எனது புகைப்பட அடையாள அட்டையை தனிப்பட்ட முறையில் சரிபார்க்க முடியுமா? அதற்கான காரணத்தை நான் சொல்ல வேண்டுமா?

ஆம், இந்த நோக்கத்திற்காக வாக்குச்சாவடியில் தனி இடம் ஒதுக்கப்படும். உங்கள் புகைப்பட

அடையாளத்தை தனிப்பட்ட முறையில் சரிபார்க்கும்படி நீங்கள் கேட்கலாம். அத்தகைய கோரிக்கைகள் கண்ணியமாகவும் மரியாதையுடனும் கையாளப்பட வேண்டும்.

இல்லை, இந்தக் கோரிக்கைக்கான காரணத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை, அவ்வாறு செய்வது ஏன் என்று உங்களிடம் விளக்கம் கேட்கவும் கூடாது.

**வாக்களிக்க பாலின அடையாளத்துடன் கூடிய புகைப்பட அடையாளயைப் பயன்படுத்துவதைப் பற்றி நான் கவலைப்படுகிறேன், நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்கள் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள பெயர், நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்த அதே பெயராக இருக்க வேண்டும். பாலின அடையாளத்தை உள்ளடக்கிய புகைப்பட அடையாள அட்டையை நீங்கள் காட்ட வேண்டியதில்லை.

உங்களிடம் புகைப்பட அடையாள அட்டை இல்லையென்றால், பாலின அடையாளத்தைக் கொண்ட புகைப்பட அடையாள அட்டையின் தற்பபோதைய படிவத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி கவலைப்படுகிறீர்களாயின் அல்லது உங்கள் அடையாள அட்டையில் உள்ள புகைப்படத்தைப் போலவே இருக்கிறீர்களா என்று உறுதியாகத் தெரியவில்லை என்றால், நீங்கள் இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு https://www.gov.uk/apply-for-photo-id-voter-authority-certificate இல் விண்ணப்பிக்கலாம். வாக்காளர் அதிகாரச் சான்றிதழில் பாலினக் குறிப்பான் இல்லை.

**வாக்குப்பதிவு நாளுக்கு முன்பு எனது புகைப்பட அடையாள தொலைந்துவிட்டாலோ, திருடப்பட்டாலோ, அழிக்கப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்கள் புகைப்பட அடையாள தொலைந்துவிட்டாலோ, திருடப்பட்டாலோ, அழிக்கப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ, வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு முடிந்துவிட்டாலோ, நீங்கள் அவசர மாற்றாள் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கலாம்.
https://www.electoralcommission.org.uk/voting-and-elections/ways-vote/apply-vote-proxy

சாதாரண பதிலாள் வாக்கு காலக்கெடுவுக்குப் பிறகு ஏற்படும் அவசர சூழ்நிலைகளில் மட்டுமே இதைப் பயன்படுத்தலாம். உங்கள் அநாமதே ய வாக்காளர் ஆவணம் தொலைந்துவிட்டாலும், திருடப்பட்டாலும், அழிக்கப்பட்டாலும் அல்லது சேதமடை ந்தாலும் இந்தப் படிவத்தைப் பயன்படுத்தலாம். இந்த விண்ணப்பங்களை வாக்குப்பதிவு நாளில் மாலை 5 மணி வரை சமர்ப்பிக்கலாம்.

## இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழ்

**ஒரு இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழை நான் எவ்வாறு பெறுவது?**

உங்களிடம் வாக்களிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டை வடிவம் ஒன்று இல்லையெனில், நீங்கள் இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். இது அடையாள வடிவமாக அன்றி வாக்களிக்கும் நோக்கங்களுக்காக

மட்டுமே பயன்படுத்தப்பட முடியும், மேலும் இது 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக நீங்கள் ஒரு புகைப்படம், உங்கள் பிறந்த தேதி மற்றும் தேசிய காப்பீட்டு எண் ஆகியவற்றை வழங்க வேண்டும். உங்களின் தேசிய காப்பீட்டு எண் உங்களுக்குத் தெரியாவிட்டாலும் அல்லது உங்கள் அவ்வாறான எண்ணம் இல்லை என்றாலும், நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் அடையாளத்திற்கான மாற்றுச் சான்றைக் கோருவதற்காக உங்கள் கவுன்சில் உங்களைத் தொடர்பு கொள்ளும்.

நீங்கள் https://www.gov.uk/apply-for-photo-id-voter-authority-certificate இல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

அல்லது நீங்கள் ஒரு காகித விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யலாம் https://assets.publishing.service.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/1137587/VAC_public_facing.pdf இதை உங்கள் உள்ளூர் கவுன்சிலுக்கு அனுப்பவும். நீங்கள் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டதை, பிராய்லி அல்லது எளிதாகப் படிக்கத்தக்க அறிவுறுத்தல்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் உள்ளூர் தேர்தல் சேவைக் குழுவைத் தொடர்புகொள்ள, உங்கள் அஞ்சல் குறியீட்டை இங்கே உள்ளிடவும் - https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information

### இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழில் என்ன தகவல் சேர்க்கப்பட்டுள்ளது?

இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழில் உங்கள் முழுப் பெயர் மற்றும் புகைப்படம், வழங்கிய உள்ளூர் கவுன்சில், பொருத்தமான அடையாளங்காட்டி (கவுன்சிலால் ஒதுக்கப்பட்ட எண்கள் மற்றும் எழுத்துக்கள் உட்பட குறிப்புகள்), வழங்கப்பட்ட தேதி மற்றும் பரிந்துரைக்கப்பட்ட புதுப்பித்தல் தேதி ஆகியவை காண்பிக்கப்படும்.

### வாக்காளர் அதிகாரச் சான்றிதழ் விண்ணப்பத்திற்கான புகைப்படத் தேவைகள் என்ன?

வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கான விண்ணப்பச் செயல்முறையின் ஒரு பகுதியாக, நீங்கள் ஒரு சமீபத்திய புகைப்படத்தை வழங்க வேண்டும். புகைப்படத்திற்கான தேவைகள் கடவுச்சீட்டுப் படங்களுக்கான தேவைகளைப் போன்றவையாகும், உங்கள் தலை மற்றும் தோள்களைக் காட்ட வேண்டும், உங்கள் தலையை எதுவும் மறைக்காமல் இருக்க வேண்டும் - மத அல்லது மருத்துவ காரணங்களுக்காக தலையை மூடுவது தவிர. எக்காரணம் கொண்டும் உங்கள் முகத்தை மறைக்கக் கூடாது.

ஃபோட்டோ ஸ்டைல்

புகைப்படம் விண்ணப்பதாரரின் புகைப்படமாக இருக்க வேண்டும்:

- முகம் முன்னோக்கிய, கேமராவை நேராகப் பார்க்கக்கூடியதாக இருத்தல்
- மத நம்பிக்கைகள் அல்லது மருத்துவக் காரணங்களுக்காக தலையை மூடுவதைத் தவிர, தலையை மூடாமல் தலை மற்றும் தோள்களின் நெருக்கமானப் புகைப்படம். எக்காரணம் கொண்டும் முகத்தை மறைக்கக் கூடாது
- வேறு எந்தவொரு நபரும் தென்படக் கூடாது
- ஒரு வெற்று முகபாவனையுடன் மற்றும் கண்கள் திறந்ததாகவும் தெளிவாகத் தெரியக்

கூடியதாகவும இருத்தல், உதாரணமாக, வெய்யிலுக்கான மூக்குக் கண்ணாடிகள் இல்லாமல் மற்றும் தலை முடியால் மறைக்கப்படாததாகவும் இருத்தல்.

ஏதேனும் குறைபாடு காரணமாக விண்ணப்பதாரரால் அந்தத் தேவைகளில் ஒன்று அல்லது இரண்டையும் பூர்த்தி செய்யும் புகைப்படத்தை வழங்க முடியாத பட்சத்தில் இது பொருந்தாது என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.

புகைப்படத்தின் தரம்

விண்ணப்பதாரரின் புகைப்படம் கண்டிப்பாக:

- உண்மையான உருவமாக இருத்தல்
- வர்ணப் புகைப்படமாக இருத்தல்
- வெற்று, வெளிச்சமான பின்னணியில் எடுக்கப்பட்டிருத்தல்
- கூர்மையான குவிப்புடனும் தெளிவாகவும் இருத்தல்
- 'ரெட் ஐ', முகத்தை மறைக்கும் நிழல்கள் அல்லது பிரதிபலிப்பு ஆகியவற்றிலிருந்து விடுபட்டிருத்தல்
- சேதமடையாததாக இருத்தல் வேண்டும்

புகைப்படத்தின் அளவு

விண்ணப்பதாரர் ஆன்லைனில் விண்ணப்பிப்பதாய் இருக்கும்பட்சத்தில், அவர்கள் வழங்கும் புகைப்படம் பின்வரும் அளவுகளில் இருக்க வேண்டும்:

- குறைந்தபட்சம் 750 பிக்சல்கள் உயரம் மற்றும் 600 பிக்சல்கள் அகலம்
- 20MB அளவுக்கு அதிகமாக இல்லாத எலக்ட்ரானிக் கோப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல்

விண்ணப்பதாரர் காகிதப் படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிப்பதாய் இருக்கும்பட்சத்தில், புகைப்படம் அளவுகளில் காணப்பட வேண்டும்:

- குறைந்தபட்சம் 45 மில்லிமீட்டர் உயரம் மற்றும் 35 மில்லிமீட்டர் அகலம்
- உயரம் 297 மில்லிமீட்டரை விட, அகலம் 210 மில்லிமீட்டரை விட பெரியதாக இல்லாதிருத்தல்

**இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழ் விண்ணப்பத்துக்காக நான் எங்கு ஆதரவைப் பெறலாம்?**

இலவச வாக்காளர் ஆணையச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பது, உங்கள் விண்ணப்பத்திற்கு புகைப்படம் எடுப்பது அல்லது காகித விண்ணப்பப் படிவத்தைக் கோருவது போன்றவற்றில் உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், உங்கள் பேரூராட்சி கவுன்சிலில் உள்ள தேர்தல் சேவைக் குழுவைத் தொடர்புகொள்ளலாம்.

உங்கள் அஞ்சல் குறியீட்டை உள்ளிடுவதன் மூலம் அவர்களின் தொடர்பு விவரங்களைக் கண்டறியலாம்
https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information

நீங்கள் மேலும் தகவலைக் காணலாம்
https://www.electoralcommission.org.uk/voting-and-elections/voter-id/applying-a-voter-authority-certificate

**இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க காலக்கெடு உள்ளதா?**

ஆம், நீங்கள் எந்த நேரத்திலும் வாக்காளர் அதிகாரச் சான்றிதழ் அல்லது அநாமதேய வாக்காளர் ஆவணத்திற்கு விண்ணப்பிக்கலாம். ஒரு குறிப்பிட்ட தேர்தலுக்கான விண்ணப்பங்களுக்கான இறுதிநாள் தேர்தல் நாளுக்கு 6 தினங்கள் முன்பாக மாலை 5 மணி ஆகும்.

உங்கள் விண்ணப்பம் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பது உள்ளிட்ட கூடுதல் தகவல்களை அறிய, தேர்தல் பதிவு அதிகாரிகளுக்காக வெளியிடப்பட்ட இந்த தேர்தல் ஆணைய வழிகாட்டுதலைப் பார்க்கவும்: https://www.electoralcommission.org.uk/running-electoral-registration-england/voter-authority-certificates-and-anonymous-electors-documents/deadlines-applications-voter-authority-certificates-or-anonymous-electors-documents-a-particular

**மற்ற விஷயங்களுக்கு வாக்காளர் அதிகாரச் சான்றிதழை ஒரு புகைப்பட அடையாள அட்டையாகப் பயன்படுத்தலாமா?**

இல்லை, வாக்காளர் அதிகாரச் சான்றிதழ் வாக்களிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே, வேறு எந்தக் காரணத்திற்காகவும் அடையாளச் சான்றாகப் பயன்படுத்த முடியாது. அது வயதுச் சான்றாகவோ அல்லது முகவரி சான்றாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**வாக்களிப்பதற்காகப் பதிவு செய்தல்**

**வாக்களிப்பதற்கு புகைப்பட அடையாள அட்டையைக் காட்டுவது போக, வாக்களிப்பதற்கென நான் பதிவும் செய்ய வேண்டுமா?**

ஆம். உங்கள் சனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதன் முதல்படியாக வாக்களிக்கப் பதிவுசெய்தல் உள்ளது. தேர்தல் நாளுக்கு மிக முன்னதாகவே நீங்கள் வாக்களிக்கப் பதிவுசெய்துகொள்ள வேண்டும். எனவே முன்கூட்டியே தயாராக இருங்கள்!

**வாக்களிக்கப் பதிவுசெய்வது எப்படி?**

வாக்களிக்கப் பதிவு செய்ய நீங்கள் www.gov.uk/register-to-vote -க்குச் சென்று ஆன்லைன் படிவத்தை நிரப்புங்கள். அதற்கு ஒருசில நிமிடங்களே எடுக்கும். உங்களுக்குத் தேவையானதெல்லாம் உங்கள் தேசியக் காப்பீட்டு (NI) எண் மட்டுமே. உங்கள் NI எண் பதிவாக்க நடைமுறையில் ஒரு பிரத்தியேக அடையாளங்காட்டியாகப் பயன்படுகிறது. இது நீங்கள் யார் என்பதை உறுதிசெய்யும் எளிதான, விரைவான வழியாகும். உங்களுக்கு NI எண் தெரியாவிட்டாலோ அல்லது அது இல்லாவிட்டாலோ, கவலை வேண்டாம் – இணையப் பதிவாக்க நடைமுறையின்போது உங்கள் தொடர்பு விபரங்களை விட்டுச் செல்லுங்கள். உங்கள் உள்ளூர் நகரசபை வாக்காளர் சேவைப் பிரிவு உங்களைத் தொடர்புகொள்ளும்.

**வாக்களிக்க பதிவு செய்வதற்கு எனது அடையாளத்திற்கான ஆதாரத்தை நான் வழங்க வேண்டுமா?**

வாக்களிக்க பதிவு செய்வதற்கான அனைத்து புதிய விண்ணப்பங்களும் மத்திய அரசின் ஆவணங்களுடன் பொருந்துகின்றன. பொருத்தம் கிடைக்காத இடத்தில், 'அடையாளச் சான்று'க்கான கோரிக்கை உங்களுக்கு அனுப்பப்படும். நீங்கள் விரைவில் பதிலளிக்க வேண்டும், இல்லையெனில் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

அடையாளத்தின் ஆதாரம் உங்கள் பெருநகர தேர்தல் சேவைகளுக்கு ஆன்லைனில் அல்லது அச்சில் வழங்கப்பட வேண்டும். நீங்கள் ஏதேனும் ஒன்றை வழங்கலாம்:

- ஒரு "முதன்மை அடையாள ஆவணம்", அல்லது
- ஒரு "நம்பகமான அரசாங்க ஆவணம்" மற்றும் இரண்டு "நிதி / சமூக வரலாற்று ஆவணங்கள்", அல்லது
- நான்கு "நிதி / சமூக வரலாற்று ஆவணங்கள்"

| முதன்மை அடையாள ஆவணம் | |
|---|---|
| **ஆவணம்** | **குறிப்புகள்** |
| பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) | ஏதேனும் தற்போதைய பாஸ்போர்ட் |
| பயோமெட்ரிக் குடியிருப்பு அனுமதி | UK வழங்கியது மட்டுமே |
| EEA அடையாள அட்டை | இன்னும் செல்லுபடியாகும் புகைப்பட அட்டை |
| தற்போதைய ஓட்டுநர் உரிமத்தின் ஒரு பகுதி | UK/ஐஷில் ஆஃப் மேன் / சேனல் தீவுகள் (முழு அல்லது தற்காலிகமானது) |
| வட அயர்லாந்து வாக்காளர் அடையாள அட்டை | |

| நம்பகமான அரசாங்க ஆவணம் | |
|---|---|
| **ஆவணம்** | **குறிப்புகள்** |
| தற்போதைய ஓட்டுநர் உரிமத்தின் பழைய-பாணி காகித பதிப்பு | UK மட்டும் |
| தற்போதைய புகைப்பட ஓட்டுநர் உரிமம் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி தவிர்ந்த ஏனையவை |
| பிறப்புச் சான்றிதழ் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி மட்டும் |
| திருமண அல்லது சிவில் கூட்டாண்மை சான்றிதழ் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி மட்டும் |
| தத்தெடுப்புச் சான்றிதழ் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி மட்டும் |
| துப்பாக்கி உரிமம் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி மட்டும் |

| | |
|---|---|
| போலீஸ் ஜாமீன் தாள் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி மட்டும் |

| நிதி மற்றும் சமூக வரலாற்று ஆவணங்கள் | | |
|---|---|---|
| ஆவணம் | குறிப்புகள் | வழங்கப்பட்ட திகதி மற்றும் செல்லுபடியாகும் காலம் |
| அடமான அறிக்கை | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 12 மாதங்களில் வழங்கப்பட்டது |
| வங்கி அல்லது கட்டுமானக் கழக அறிக்கை | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |
| வங்கி அல்லது கட்டுமானக் கழகத்தின் கணக்கு ஆரக்பித்தலின் உறுதிப்படுத்தல் கடிதம் | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |
| கடன் அட்டை அறிக்கை | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |
| நிதி அறிக்கை (உதாரணமாக, ஓய்வூதியம் அல்லது | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 12 மாதங்களில் வழங்கப்பட்டது |
| கவுன்சில் வரி அறிக்கை | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி | கடந்த 12 மாதங்களில் வழங்கப்பட்டது |
| பயன்பாட்டு பில் (மொபைல் பில் தவிர) | UK மற்றும் கிறவுண் டிப்பென்சி | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |
| P45 அல்லது P60 அறிக்கை | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 12 மாதங்களில் வழங்கப்பட்டது |
| நன்மை அறிக்கைகள் (உதாரணமாக, குழந்தை நலன், ஓய்வூதியம்) | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| மத்திய அல்லது உள்ளூர் அரசு, அரசு நிறுவனம் அல்லது உள்ளாட்சித்துறை உரிமை வழங்கும் (உதாரணமாக, DWP, ஜொப் சென்ரர் பிளஸ், HMRC) | UK , கிறவுண் டிப்பென்சி, அல்லது EEA | கடந்த 3 மாதங்களில் வழங்கப்பட்டது |

**என்னிடம் தேசியக் காப்பீட்டு எண் இல்லை. இருந்தும் என்னால் வாக்களிக்கப் பதிவுசெய்ய முடியுமா?**

இப்போதும் உங்களால் இணையவழி வாக்காளர் பதிவு வாயிலில் விண்ணப்பிக்க முடியும். ஆனால் உங்கள் தொடர்பு விபரங்களை நீங்கள் தர வேண்டும். உங்கள் நகரசபை வாக்காளர் சேவைப்பிரிவு இந்த நடைமுறையை நிறைவுசெய்ய உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க ஏதேனும் வழியில் உங்களைத் தொடர்புகொள்ளும். உதாரணமாக, உங்களிடம் பிறப்புச் சான்றிதழ், மின் கட்டண இரசீதுகள், வங்கி அறிக்கைகள் கேட்கப்படலாம். இதன் கருத்து உங்கள் கையில் தேசிய காப்பீட்டு எண் இல்லாவிட்டாலும், நீங்கள் வாக்களிக்க பதிவு செய்யலாம் என்பதாகும்.

**இலண்டனில் யாரெல்லாம் பதிவுசெய்யவும் வாக்களிக்கவும் முடியும்?**

நீங்கள் இலண்டனில் வசிப்பவராக (வழக்கமாக வசிக்கின்றீர்கள்) மற்றும் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால் வாக்களிக்க பதிவு செய்யலாம் (ஆனால் நீங்கள் 18 வயது வரை வாக்களிக்க முடியாது) .

தற்போது, பிரிட்டன், ஐரிஷ், தகுதிவாய்ந்த காமன்வெல்த், தகுதிவாய்ந்த ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் மற்றும் இலண்டனில் வசிக்கும் வாக்களிக்கும் உரிமையைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் பதிவு செய்து வாக்களிக்க முடியும்.

பிரிட்டிஷ் தேசியச் சட்டத்தைத் திருத்தி 15 டிசம்பர் 2023 அன்று நடைமுறைக்கு வந்த பிரிட்டிஷ் தேசியம் British Nationality (Eswatini, Gabon and Togo) Order 2023 க்கு இணங்க, டோகோ மற்றும் காபோன் குடிமக்கள் இப்போது தகுதிவாய்ந்த காமன்வெல்த் குடிமக்களாக வாக்களிக்க பதிவு செய்ய முடியும்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிரித்தானிய பிரஜைகள், முன்னர் லண்டனில் வசித்த அல்லது வாக்களிக்க பதிவு செய்திருந்தால், அவர்கள் லண்டனில் வசித்த கடைசி முகவரியைப் பயன்படுத்தி ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத் தேர்தல்களில் பதிவு செய்து வாக்களிக்க தகுதியுடையவர்கள்.

உங்கள் தகுதியை நீங்கள் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/which-elections-can-i-vote இல் சரிபார்க்கலாம்.

**எந்தத் தேர்தல்களில் நான் வாக்களிக்கலாம்?**

நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் இலண்டனில் வசிக்கும் ஒரு பிரிட்டிஷ், ஐரிஷ் அல்லது தகுதிவாய்ந்த காமன்வெல்த் குடிமகனாக இருந்தால், நீங்கள் இங்கிலாந்து பொது / பாராளுமன்ற தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகள், இலண்டன் உள்ளூர் / பெருநகர கவுன்சில் தேர்தல்கள் மற்றும் லண்டன் மேயர் / லண்டன் சட்டமன்றத் தேர்தல்கள் உட்பட அனைத்து தேர்தல்களிலும் வாக்களிக்கலாம்.

நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த ஐரோப்பிய குடிமகன் (EU) குடிமகன் அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் இலண்டனில் வசிக்கும் தக்கவைக்கப்பட்ட உரிமைகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய குடிமகனாக இருந்தால், இலண்டன் பெருநகர கவுன்சில் தேர்தல்கள் மற்றும் இலண்டன் மேயர் / இலண்டன் சட்டமன்றத் தேர்தல்கள் போன்ற உள்ளூர் தேர்தல்களில் மட்டுமே நீங்கள் வாக்களிக்க முடியும்.

தகுதிவாய்ந்த ஐரோப்பிய ஒன்றிய குடிமகன் எனப்படுபவர் இலண்டனில் நுழைய அல்லது தங்க அனுமதி பெற்ற  டென்மார்க், லக்சம்பர்க், போலந்து, போர்ச்சுகல் அல்லது ஸ்பெயினின் ஐரோப்பிய ஒன்றிய குடிமகனாவார்  அல்லது சேனல் தீவுகள் அல்லது ஐஷில் ஆஃப் மேனில் அனுமதி தேவையற்றவர்

தக்கவைக்கப்பட்ட வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்ட ஒரு ஐரோப்பிய ஒன்றிய குடிமகன் 2020 டிசம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது ஐஷில் ஆஃப் மேனில் நுழைய அல்லது தங்க அனுமதி பெற்ற வேறு எந்த ஐரோப்பிய ஒன்றிய நாட்டிலும் ஐரோப்பிய ஒன்றிய குடிமகனாக இருக்கிறார், அல்லது அனுமதி தேவையில்லை, இது இடைவெளி இல்லாமல் தொடர்கிறது.

UK, ஐஷில் ஆஃப் மேன் அல்லது சேனல் தீவுகள் இல் நுழைய அல்லது தங்குவதற்கான அனுமதி (நுழைவதற்கான விடுப்பு அல்லது தங்குவதற்கான விடுப்பு என்றும் அழைக்கப்படுகிறது) என்பது சட்டப்பூர்வ குடியேற்ற நிலையைக் குறிக்கிறது.

புதுப்பித்த தகவலுக்கு https://www.electoralcommission.org.uk/.  ஐப் பார்க்கவும்

**வாக்களிக்க பதிவுசெய்ய எனக்கு 18 வயது ஆகியிருக்க வேண்டுமா?**

இல்லை, இது பொதுவாகக் காணப்படும் ஒரு தவறான கருத்தாகும். இலண்டனிலும் இங்கிலாந்தின் ஏனைய பகுதியிலும், நீங்கள் 16 வயது முதலே வாக்களிக்கப் பதிவுசெய்யலாம். ஆனால் உங்களுக்கு 18 வயது ஆகும்வரை நீங்கள் வாக்களிக்க முடியாது.

**என்னிடம் ஒரு நிலையான முகவரி இல்லை. நான் வாக்களிக்கப் பதிவுசெய்ய முடியுமா?**

ஆம், உங்களால் முடியும். பலருக்கும் நிலையான அல்லது நிரந்தர முகவரி இருப்பதில்லை. சிலர் வீடற்றோராக உள்ளனர். இருந்தும் எங்கு உங்களுக்கு அதிகளவில் தொடர்பு உள்ளதோ அல்லது எங்கு அதிக நேரம் செலவிடுகிறீர்களோ அந்த இடத்தை உள்ளூர் தொடர்பாளரின் உறுதி மொழியைப் பயன்படுத்தி நீங்கள் வாக்களிக்கப் பதிவுசெய்யலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பதிவு செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட படிவம் உள்ளது - அதை நீங்கள் இங்கே காணலாம் https://www.gov.uk/government/publications/register-to-vote-if-you-havent-got-a-fixed-or-permanent-address

**ஒருமுறை நான் வாக்களிக்கப் பதிவுசெய்தபின், அது வாழ்நாள் முழுக்க செல்லுபடியாகுமா?**

இல்லை,நீங்கள் எப்போதாவது உங்கள் முகவரியை, உங்கள் சட்டப்பூர்வப் பெயரை அல்லது உங்கள் தேசத்தை மாற்றினால் நீங்கள் திரும்பவும் பதிவுசெய்ய வேண்டும்.இரட்டைக் குடியுரிமை உடையோர் தங்கள் பிரிட்டிஷ் குடியுரிமை பெறும்போது திரும்பப் பதிவுசெய்ய வேண்டும். காரணம் இது முழு வாக்குரிமைகளைக் கொண்டுள்ளது.

**வாக்களிக்கப் பதிவு செய்ய காலக்கெடு உள்ளதா?**

எந்த நேரத்திலும் நீங்கள் வாக்காளராகப் பதிவுசெய்ய முடியும். எனினும், பதிவுசெய்வதற்கான உங்கள் விண்ணப்பம் உடனடியாகச் செயலாக்கம் பெறாது. எனவே எந்தவொரு வரவிருக்கும் தேர்தல்களுக்கும் முடிந்தவரை முன்னதாகவே பதிவுசெய்வது சிறந்தது. எந்தவொரு குறிப்பிட்ட தேர்தலுக்குமான வாக்காளர் பதிவுக்கான கடைசிநாள் முன்னதாகவே விளம்பரப்படுத்தப்படும். ஆனால் வழக்கமாக தேர்தல் நாளுக்குக் கிட்டத்தட்ட இருவாரங்களுக்கு முன்பு இது இருக்கும்.

**நான் வாக்களிக்க பதிவு செய்தால், நான் வாக்களிக்க வேண்டுமா?**

ஐக்கிய இராச்சியத்தில் வாக்களிப்பது கட்டாயமில்லை. எனவே, நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்திருந்தால், வாக்களிக்கலாமா வேண்டாமா என்பது உங்கள் விருப்பத்தைப் பொறுத்ததாகும். ஆனால் நீங்கள் முதலில் வாக்களிக்கப் பதிவு செய்யவில்லை என்றால் நீங்கள் வாக்களிக்க முடியாது.

## வாக்களிக்க பதிவுசெய்தல் மற்றும் வாக்களிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாளத்தை வைத்திருப்பதன் நன்மைகள்

**வாக்களிக்கப் பதிவுசெய்வதனாலும் அதற்காக ஒரு புகைப்பட அடையாள அட்டையைப் பெறுவதாலும் என்ன பயன் கிடைக்கும்?**

வாக்களிக்கப் பதிவுசெய்வதால் உங்கள் அடிப்படை சனநாயக உரிமைகளைச் செயல்படுத்த முடியும். இது சிரமப்பட்டு பெற்ற ஒன்று. எல்லா இலண்டன்வாசிகளுக்கும் இது கிடைப்பதில்லை.

வாக்களிப்பதற்குப் பதிவுசெய்து கொள்வதால் உங்கள் கடன் மதிப்புப்புள்ளியும் மேம்படுகிறது. காரணம் கடன் வழங்கக்கூடியவர்கள் தேர்தல் பதிவேட்டைப் பார்த்து உங்கள் பெயரையும் முகவரியையும் உறுதிப்படுத்த முடியும். வாக்காளர் பதிவு சான்றாளர் சேவையில் பங்கேற்பாளர்களைத் தேர்வு செய்யவும் பயன்படும் - பன்முகப்பட்ட சான்றாளர்களால் நியாயமான தீர்ப்புகள் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது.

நீங்கள் வாக்களிக்க விரும்புகின்றீர்களா இல்லையா என்பதை நீங்கள் தீர்மானிக்கின்றீர்கள். ஆனால், வாக்களிக்கப் பதிவுசெய்திருப்பதும், வாக்களிக்க முடிவதற்காக சரியான புகைப்பட அடையாள அட்டை  வைத்திருப்பதை உறுதிசெய்வதும், உங்களின், உங்கள் குடும்பத்தின், உங்கள் சமூகத்தின், இலண்டனின் மற்றும் நாட்டின் வருங்காலத்தின் முக்கியமான பிரச்சினைகளில்  உங்களின் குரல் கேட்கப்பட அனுமதிக்கிறது.

எனது தரவு

**நான் வாக்களிக்கப் பதிவுசெய்துகொண்டால் அல்லது இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தால் எனது தரவுகளை யார் யாரால் அணுகமுடியும்?**

உங்கள் பெயரும் விலாசமும் வாக்காளர் இடாப்பில் இருப்பது உங்கள் பாதுகாப்பினைப் பாதிக்கலாம் அல்லது உங்கள் வீட்டில் உள்ள ஒருவரின் பாதுகாப்பிற்குப் பாதிப்பு ஏற்படலாம் என நீங்கள் நினைத்தால், அநாமதேய முறையில் வாக்களிக்கப் பதிவு செய்ய நீங்கள் விண்ணப்பிக்க முடியும். இந்தச் செயல்முறைக்கு தேவை யான இங்கே காணலாம் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/register-vote/register-vote-anonymously.

நீங்கள் அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்திருக்கும் நிலையில் நேரில் வாக்களிக்க விரும்பினால், நீங்கள் ஒரு **அநாமதேய வாக்காளர் ஆவணத்திற்கு** விண்ணப்பிக்க வேண்டும். மேலும் தகவல்களை இங்கே காணலாம் https://www.electoralcommission.org.uk/voting-and-elections/who-can-vote/register-vote/register-vote-anonymously#anonymous-electors-document

உங்கள் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு குறித்து உங்களுக்குக் கவலையிருந்தால், அதாவது மூன்றாம் தரப்பினரால் 'திறந்த ஏடு' கொள்முதல் செய்யப்படலாம் என்று எண்ணினால், இணையவழியில் பதிவுசெய்யும்போது திறந்த பதிவேடு என்பதில் இருந்து உங்களால் எப்போதும் 'விலக' முடியும். 'முழு பதிவேட்டில்' நீங்கள் தொடர்ந்து இருப்பீர்கள். இது தொகுதி வாக்காளர் சேவைகளுக்காகவும் (உதாரணமாக, தேர்தல்களுக்கு முன்பாக வாக்கு அட்டைகளை அனுப்புவதற்கு) கடன் விண்ணப்பங்கள்/கடன் மதிப்புப்புள்ளி சரிபார்க்கவும் பயன்படும். இது அநாமதேயமாகப் பதிவுசெய்வதிலிருந்து வேறுபட்டது. அநாமதேயப் பதிவில் உங்கள் விபரங்கள் 'திறந்த ஏட்டிலோ' அல்லது 'முழு ஏட்டிலோ' தோன்றாது.

## வாக்களிக்கும் முறைகள்

**வாக்களிக்க வெவ்வேறு வழிகள் உள்ளனவா?**

வாக்களிக்கப் பதிவுசெய்து கொண்டதும் தேர்தல் நாளில் வாக்குசாவடிக்கு நேரடியாக வந்து நீங்கள் வாக்களிக்கலாம்; அஞ்சல் வழியிலும் வாக்களிக்கலாம் (தேர்தல் நாளில் நீங்கள் உள்ளூரில் இல்லையெனில், உதாரணமாக, நீங்கள் விடுமுறையில் இருந்தால்); அல்லது மாற்றாள் மூலம் வாக்களிக்கலாம் (அதாவது நீங்கள் நம்பக்கூடிய ஒருவரை உங்கள் சார்பில் வாக்களிக்கச் சொல்லலாம், உதாரணமாக உங்களுக்கு உடல்நலமில்லாத போது).

பதிலாள் மூலம் வாக்களிக்க, https://www.gov.uk/apply-proxy-vote இல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

தபால் மூலம் வாக்களிக்க, https://www.gov.uk/apply-postal-vote இல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாவிட்டால், பதிலாள் வாக்கு விண்ணப்ப படிவத்தை https://www.gov.uk/government/collections/proxy-voting-application-forms இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் அல்லது தபால் மூல வாக்கு படிவத்தை

https://www.gov.uk/government/publications/apply-for-a-postal-vote இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் மற்றும் அதை உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பவும், அல்லது விண்ணப்ப படிவத்தை தபாலில் உங்களுக்கு அனுப்புமாறு கோரவும்.

உங்கள் மாநகராட்சி தேர்தல் சேவைகளின் விவரங்களைக் https://www.gov.uk/contact-electoral-registration-office. இல் கண்டறியலாம்

## வாக்களிக்கும் அனைத்து வழிகளுக்கும் எனக்கு புகைப்பட அடையாள அட்டை தேவையா?

இல்லை, தபால் மூலமாகவோ அல்லது மாற்றாள் மூலமாகவோ வாக்களிக்க நீங்கள் புகைப்பட அடையாளயைக் காட்ட வேண்டியதில்லை.

உங்கள் பதிலாள் (ப்ராக்ஸி) உங்கள் சார்பாக வாக்களிக்கும்போது, வாக்குச் சாவடியில் அவர்களின் சொந்த புகைப்பட ஐடியைக் காட்ட வேண்டும். வாக்குச் சாவடியில் நேரில் வாக்களிக்க உங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டை தேவைப்படும்.

பதிலாள் அல்லது தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் https://www.gov.uk/apply-proxy-vote அல்லது https://www.gov.uk/apply-postal-vote என்ற ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாவிட்டால், பதிலாள் வாக்கு விண்ணப்ப படிவத்தை https://www.gov.uk/government/collections/proxy-voting-application-forms இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் அல்லது தபால் மூல வாக்கு படிவத்தை https://www.gov.uk/government/publications/apply-for-a-postal-vote இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் மற்றும் அதை உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பவும், அல்லது விண்ணப்ப படிவத்தை தபாலில் உங்களுக்கு அனுப்புமாறு கோரவும்.

உங்கள் மாநகராட்சி தேர்தல் சேவைகள் பற்றிய விவரங்களை https://www.gov.uk/contact-electoral-registration-office. இல் பார்க்கலாம்.

## பதிலாள் மூலம் வாக்களிப்பு தொடர்பில் நான் தெரிந்து கொள்ள வேண்டிய மாற்றங்கள் என்ன?

பதிலாள் வாக்களிப்பில் மாற்றங்கள் 31 அக்டோபர் 2023 முதல் நடைமுறைக்கு வந்தன.

ஒரு நபர் எத்தனை பேருக்கு பதிலியாக செயல்பட முடியும் என்பதற்கு இப்போது ஒரு வரம்பு உள்ளது, இதில் குடும்ப உறுப்பினர்களும் அடங்குவர். நீங்கள் அதிகபட்சம் இரண்டு இங்கிலாந்தை தளமாகக் கொண்ட வாக்காளர்கள் அல்லது நான்கு இங்கிலாந்து அல்லாத வாக்காளர்கள் (அதாவது வெளிநாட்டு பிரிட்டிஷ் வாக்காளர்கள்) சார்பாக ப்ராக்ஸி மூலம் வாக்களிக்கலாம்.

https://www.gov.uk/apply-proxy-vote இல் ஆன்லைனில் சில வகையான ப்ராக்ஸி வாக்குகளுக்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பத்திற்கு சான்றொப்பம் தேவைப்பட்டாலோ (அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்தவர்களுக்குத் தேவை) அல்லது அவசரகால பதிலாள்

வாக்கிற்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தாலோ உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாது.

உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாவிட்டால், பதிலாள் வாக்கு விண்ணப்ப படிவத்தை https://www.gov.uk/government/collections/proxy-voting-application-forms இலிருந்து பதிவிறக்கம் செய்து நிரப்பி உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பலாம் அல்லது விண்ணப்பப் படிவத்தை தபாலில் உங்களுக்கு அனுப்பக் கோரலாம்.

உங்கள் பெருநகர தேர்தல் சேவைகளின் விவரங்களை https://www.gov.uk/contact-electoral-registration-office இல் காணலாம்.

ஆன்லைன் மற்றும் காகித பயன்பாடுகள் இரண்டிற்கும் ஐடி சரிபார்ப்பு தேவைப்படும் (அவசர பதிலாள் வாக்குகள் தவிர). பதிலாள் மூலம் வாக்களிக்க நீங்கள் புகைப்பட ஐடியை வழங்க வேண்டிய அவசியமில்லை (உங்கள் சார்பாக வாக்களிக்க உங்கள் பதிலாளிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட ஐடி தேவைப்படும்). உங்கள் கையொப்பம் மற்றும் பிறந்த தேதியின் சரிபார்ப்பு உட்பட பிற அடையாளச் சோதனைகளும் உள்ளன.

பதிலாள் வாக்களிப்பு பற்றிய புதுப்பித்த தகவலுக்கு https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/apply-vote-proxy இனைப் பார்க்கவும்.

பதிலாள் மூலம் வாக்களிக்க உங்களிடம் ஏற்கனவே ஏற்பாடு இருந்தால் இடைக்கால செயல்முறைகளே இருக்கும். உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவு அலுவலகத்தை https://www.gov.uk/contact-electoral-registration-office இல் தொடர்புகொள்வதன் மூலம் ஏற்கனவே உள்ள பதிலாள் வாக்கை நீங்கள் புதுப்பிக்கலாம்.

**தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் நான் தெரிந்து கொள்ள வேண்டிய மாற்றங்கள் என்ன?**

அஞ்சல் வாக்களிப்பில் மாற்றங்கள் 31 அக்டோபர் 2023 முதல் நடைமுறைக்கு வந்தன.

வெற்றிகரமான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பமானது அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க செல்லுபடியாகும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, நீங்கள் தொடர்ந்து தபால் மூலம் வாக்களிக்க விரும்பினால் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

பதிலாள் வாக்கு விண்ணப்ப படிவத்தை https://www.gov.uk/government/publications/apply-for-a-postal-vote இலிருந்து பதிவிறக்கம் செய்து நிரப்பி உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பலாம் அல்லது விண்ணப்பப் படிவத்தை தபாலில் உங்களுக்கு அனுப்பக் கோரலாம்.

உங்கள் பெருநகர தேர்தல் சேவைகளின் விவரங்களை https://www.gov.uk/contact-electoral-registration-office இல் காணலாம்.

தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் புகைப்பட ஐடியை வழங்க தேவையில்லை. உங்கள் கையொப்பம் மற்றும் பிறந்த தேதியின் சரிபார்ப்பு உட்பட பிற அடையாளச் சோதனைகளும் உள்ளன. தபால் மூல வாக்களிப்பு பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/apply-vote-post இனை அணுகவும்.

தபால் மூலம் வாக்களிக்க உங்களிடம் ஏற்கனவே ஏற்பாடு இருந்தால் இடைக்கால செயல்முறைகளே இருக்கும். உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவு அலுவலகத்தை

https://www.gov.uk/contact-electoral-registration-office இல் தொடர்புகொள்வதன் மூலம் ஏற்கனவே உள்ள தபால் வாக்கை நீங்கள் புதுப்பிக்கலாம்.

உங்கள் தபால் மூல வாக்கை உரிய நேரத்தில் பதிவு செய்ய முடியாவிட்டால், வாக்களிப்பு தினத்தன்று அதை உங்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு அல்லது உங்கள் உள்ளூர் சபைக்கு எடுத்துச் செல்லலாம். வாக்காளர்கள் தங்கள் சொந்த தபால் வாக்குகளையும், ஐந்து பேரின் தபால் வாக்குகளையும் மட்டுமே வாக்குச் சாவடியில் ஒப்படைக்க முடியும். . பிரச்சாரகர்கள் தங்கள் சொந்த அஞ்சல் வாக்குகளை மட்டுமே ஒப்படைக்க முடியும், மேலும் ஐந்து பேர் வரை நெருங்கிய உறவினர்கள் அல்லது அவர்கள் வழக்கமான கவனிப்பை வழங்கும் ஒருவர். உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள் அல்லது வாக்களிப்பு நிலையங்களுக்கு அஞ்சல் வாக்குகளை ஒப்படைக்கும் அனைத்து நபர்களும் அஞ்சல் வாக்கு திருப்பி அனுப்பும் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். பிரச்சாரகர்கள் தங்கள் சொந்த அஞ்சல் வாக்குகளை மட்டுமே ஒப்படைக்க முடியும், மேலும் ஐந்து பேர் வரை நெருங்கிய உறவினர்கள் அல்லது அவர்கள் வழக்கமான கவனிப்பை வழங்கும் ஒருவருக்கு மட்டுமே வழங்க முடியும்.

## இலண்டன் மேயர் மற்றும் இலண்டன் சட்டமன்றத் தேர்தல்களுக்கு என்ன வாக்குப்பதிவு முறை பயன்படுத்தப்படுகிறது?

தேர்தல் சட்டம் (2022) இலண்டன் மேயர் தேர்தலுக்கான வாக்களிக்கும் முறையில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. லண்டன் சட்டமன்றத்திற்கு நாங்கள் வாக்களிக்கும் முறை மாறப்படவில்லை.

### இலண்டன் மேயர் தேர்தல்

இலண்டன் மேயர் இப்போது First-Past-the-Post முறையைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்படுகிறார். நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கு அடுத்த பெட்டியில் ஒரு புள்ளடியை **[×]** இடுவதன் மூலம் நீங்கள் ஒருவருக்கு வாக்களிக்கலாம். அதிக வாக்குகளைப் பெறுபவர் இலண்டன் மேயராக வருவார். இந்த முறை இங்கிலாந்து பாராளுமன்ற / பொதுத் தேர்தல்களுக்கும் இம்முறையே பயன்படுத்தப்படுகிறது.

இலண்டன் சட்டமன்றம் 25 சட்டமன்ற உறுப்பினர்களால் (AMs) ஆனது - 11 பேர் முழு தலைநகரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் மற்றும் 14 பேர் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

### இலண்டன் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்

இலண்டன் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் First-Past-the-Post முறையைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கு அடுத்த பெட்டியில் ஒரு சிலுவையை **[×]** இடுவதன் மூலம் நீங்கள் ஒருவருக்கு வாக்களிக்கலாம். அதிக வாக்குகளைப் பெற்ற நபர் உங்கள் தொகுதியின் இலண்டன் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராவார். ஒரு தொகுதி வழக்கமாக இரண்டு அல்லது மூன்று லண்டன் பெரு நகரங்களைக் கொண்டது.

### இலண்டன் அளவிலான சட்டமன்ற உறுப்பினர்

பான்-லண்டன் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடுதல் உறுப்பினர் முறையைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், இதன்படி ஒவ்வொரு கட்சிக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அந்த கட்சி வென்ற AMs இடங்களின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக சமமாகும்.

இலண்டன் மேயர் மற்றும் லண்டன் சட்டமன்றத் தேர்தல்கள் பற்றிய மேலதிக தகவல்களை, https://www.londonelects.org.uk/changes-how-we-vote இலண்டன் எலக்ற்றில்க் காணலாம்.

**நான் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் வாக்களிக்க பதிவு செய்ய முடியுமா?**

வெளிநாடுகளில் வசிக்கும் பிரித்தானிய பிரஜைகள், முன்னர் இலண்டனில் வசித்த அல்லது வாக்களிக்க பதிவு செய்திருந்தால், அவர்கள் இலண்டனில் வசித்த கடைசி முகவரியைப் பயன்படுத்தி ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத் தேர்தல்களில் பதிவு செய்து வாக்களிக்க தகுதியுடையவர்கள்.

https://www.gov.uk/register-to-vote இல் நீங்கள் வாக்களிக்க பதிவு செய்யலாம்.

தேர்தல் சேவைகள் விண்ணப்பதாரரின் அடையாளத்தை சரிபார்த்து, கொடுக்கப்பட்ட லண்டன் முகவரியில் முந்தைய குடியிருப்பு அல்லது பதிவை சரிபார்க்கும்.

நீங்கள் வெளிநாட்டு வாக்காளராக பதிவு செய்திருந்தால், தேர்தல் தினத்தன்று நீங்கள் இலண்டனில் இருப்பீர்களானால் நேரில் சென்று வாக்களிக்கலாம் அல்லது தபால் மூலம் அல்லது பதிலாள் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கலாம்.

வெளிநாட்டு வாக்காளர் பதிவுகள் 3 ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக தகவல்களை https://www.electoralcommission.org.uk/voting-and-elections/who-can-vote/other-registration-options/voting-if-you-live-overseas இல் பார்வையிடவும்.

## <u>நேரில் வாக்களித்தல்</u>

**எனது வாக்குச்சாவடியை எங்கு கண்டறியலாம்?**

நீங்கள் நேரடியாக வாக்களிக்கப் பதிவுசெய்திருந்தால், தேர்தல் நாளுக்கு முன்பாக உங்கள் பதிவு முகவரிக்கு வாக்கு அட்டை அனுப்பப்படும். இந்த அட்டையில் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடியின் முகவரி அடங்கியிருக்கும் - நீங்கள் அந்த வாக்குச்சாவடியில் மட்டுமே வாக்களிக்க முடியும். மேலும் இது பெரும்பாலும் பள்ளிக்கூடம், சமூக மையம் போன்ற ஒரு உள்ளூர் பொதுக் கட்டிடமாக இருக்கும். தேர்தல் நாளில் இது காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும். உங்கள் வாக்காளர் அட்டை தொலைந்தால் கவலைப்பட வேண்டாம் - நீங்கள் வாக்களிப்பதற்கு அது அவசியமில்லை (**அநாமதேயமாக வாக்களிக்க நீங்கள் பதிவு செய்திருந்தால் தவிர**) மேலும் உங்கள் அஞ்சல் குறியீட்டை உள்ளிடுவதன் மூலம் உங்கள் வாக்குச் சாவடியைக் கண்டறியலாம் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information.

**வாக்குச் சாவடியில் என்ன நடக்கும்?**

அனைத்து வாக்குச்சாவடிகளும் **தேர்தல் நாளில் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்.** வாக்களிப்பு நிலையத்திற்குள் நுழைவதற்கு முன்பு வாக்காளர்களை வரவேற்று, நேரில் வாக்களிக்க, புகைப்பட அடையாளத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைக் கொண்டு வந்தீர்களா என்று கேட்பதற்குச் சிலர் இருப்பார்கள்.

வாக்குச்சாவடியில் இருக்கும் போது, நீங்கள் பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்:

- பணியாளர் ஒருவர் உங்கள் பெயர் மற்றும் முகவரியைக் கேட்டு நீங்கள் வாக்காளர் பதிவேட்டில் உள்ளீர்களா என்பதைச் சரிபார்ப்பார்.
- உங்கள் புகைப்பட அடையாள அட்டை ஏற்றுக்கொள்ளக் கூடியா (மேலும் தகவல்களுக்கு https://www.electoralcommission.org.uk/voting-and-elections/voter-id/accepted-forms-photo-id ஐப் பார்க்கவும்) என்றும் அது உங்களை ஒத்துள்ளதாக என்றும் சரிபார்ப்பதற்காக உங்கள் புகைப்பட அட்டையாள அட்டையைக் கேட்பார்கள். நீங்கள் அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்திருந்தால் (மேலும் விவரங்களுக்கு https://www.electoralcommission.org.uk/voting-and-elections/who-can-vote/register-vote/register-vote-anonymously -ஐப் பார்க்கவும்), உங்கள் வாக்கெடுப்பு அட்டை மற்றும் அநாமதேய வாக்காளர் ஆவணத்தை (AED) காண்பிக்கும்படி கேட்கப்படுவீர்கள். உங்கள் புகைப்பட அடையாள அட்டையை தனிப்பட்ட முறையில் பார்க்க நீங்கள் தேர்வுசெய்தால், அதற்கான ஒரு தனிப்பட்ட பகுதி காணப்படும். இது ஒரு தனி அறையாக இருக்கலாம் அல்லது வாக்குச் சாவடியைப் பொறுத்து தனியுரிமைத் திரையால் பிரிக்கப்பட்ட பகுதியாக இருக்கலாம்.
- உங்கள் புகைப்பட அடையாள வெற்றிகரமாகச் சரிபார்க்கப்பட்டதும், பணியாளர் உங்கள் பெயரைப் பதிவேட்டில் வெட்டிவிட்டு, நீங்கள் வாக்களிக்கக்கூடிய வேட்பாளர்களின் பட்டியலைக் கொண்ட வாக்குச் சீட்டை உங்களுக்கு வழங்குவார். உங்கள் உள்ளூர் பகுதியில் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல்கள் நடந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சீட்டுகள் உங்களுக்கு வழங்கப்படலாம்.
- உங்கள் வாக்குச் சீட்டை (அல்லது சீட்டுக்களை) வாக்குச் சாவடிக்கு எடுத்துச் செல்லுங்கள், இதன் மூலம் நீங்கள் இரகசியமாக வாக்களிக்கலாம். வாக்குச் சீட்டில் உள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படியுங்கள். சில தேர்தல்கள் வித்தியாசமான வாக்குப்பதிவு முறைகளைப் பயன்படுத்துகின்றன, எனவே ஒவ்வொரு வாக்குச்சீட்டையும் நீங்கள் சரியாக நிரப்புவதை உறுதிசெய்ய வேண்டும்.
- வாக்குச் சாவடியில் கொடுக்கப்பட்டுள்ள பென்சிலைப் பயன்படுத்தி உங்கள் வாக்குச் சீட்டை நிரப்பவும். நீங்கள் விரும்பினால் உங்கள் சொந்த பேனாவையும் பயன்படுத்தலாம். காகிதத்தில் வேறு எதையும் எழுத வேண்டாம் அல்லது உங்கள் வாக்கு எண்ணப்படாமல் போகலாம். நீங்கள் தவறு செய்தால், உங்கள் வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியில் போடாதீர்கள். வாக்குச் சாவடி ஊழியர்களிடம் மாற்று வாக்குச் சீட்டைக் கேட்டு அதை மீண்டும் நிரப்பவும்.
- நீங்கள் முடித்ததும், உங்கள் பூர்த்திசெய்த வாக்குச் சீட்டை மடித்து வாக்குப் பெட்டியில் போடவும்.

### மதக் காரணங்களுக்காக நான் முகத்திரை அணிந்தால் எனது புகைப்பட அடையாளம் எவ்வாறு சரிபார்க்கப்படும்?

நீங்கள் உங்கள் புகைப்பட அடையாள அட்டையைப் போல் இருப்பதை வாக்குச் சாவடி பணியாளர்கள் சரிபார்க்க அனுமதிக்க, அவர்கள் உங்கள் முகத்தைப் பார்க்கும் வகையில் சிறிது நேரத்திற்கு உங்கள் முகத் திரையை அகற்றும்படி கேட்கப்படுவீர்கள். மீதமுள்ள வாக்குப்பதிவு செயல்முறையின் போது முகத்திரையை அணிந்திருக்கலாம்.

நீங்கள் விரும்பினால், உங்கள் புகைப்பட அடையாளத்தைச் சரிபார்க்க ஒரு பெண்

ஊழியர்களை நீங்கள் கேட்கலாம், சாத்தியமான, வாக்குச் சாவடி ஊழியர்கள் இதற்கு இடமளிப்பார்கள்.

உங்கள் புகைப்பட அடையாளத்தை தனிப்பட்ட முறையில் சரிபார்க்கும்படி நீங்கள் கேட்கலாம். இந்த நோக்கத்திற்காக வாக்குச்சாவடியில் ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அத்தகைய கோரிக்கைகள் கண்ணியமாகவும் மரியாதையுடனும் கையாளப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைக்கான காரணத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை, அவ்வாறு செய்வது ஏன் என்று உங்களிடம் விளக்கம் கேட்கவும் கூடாது.

நீங்கள் இரகசிய பகுதியை விட்டு வெளியேற முன்பு உங்கள் முகத் திரை சரியாக உள்ளதா என்று பார்ப்பதற்காக ஒரு கண்ணாடி வைக்கப்படும்.

உங்கள் முகத்திரையை அகற்ற நீங்கள் மறுத்து, பணியாளர்களால் உங்கள் புகைப்பட அடையாளத்தைச் சரிபார்க்க முடியவில்லை என்றால், உங்கள் வாக்குச்சீட்டு உங்களுக்கு வழங்கப்படாது, எனவே உங்களால் வாக்களிக்க முடியாமல் போகலாம்.

**மருத்துவக் காரணங்களுக்காக நான் முகக் கவனம் அணிந்தால் எனது புகைப்பட அடையாளம் எவ்வாறு சரிபார்க்கப்படும்?**

நீங்கள் உங்கள் புகைப்பட அடையாள அட்டையைப் போல் இருப்பதை வாக்குச் சாவடி பணியாளர்கள் சரிபார்க்க அனுமதிக்க, அவர்கள் உங்கள் முகத்தைப் பார்க்கும் வகையில் சிறிது நேரத்திற்கு உங்கள் முகக்கவசத்தை அகற்றும்படி கேட்கப்படுவீர்கள். நீங்கள் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள வாக்காளராக இருப்பதனால் அல்லது பிற உடல்நலக் காரணங்களுக்காக முகக்கவசம் அணிந்திருந்தால் இந்தத் தேவை பொருந்தும்.

உங்கள் புகைப்பட அடையாளத்தை தனிப்பட்ட முறையில் சரிபார்க்கும்படி நீங்கள் கேட்கலாம். இந்த நோக்கத்திற்காக வாக்குச்சாவடியில் ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அத்தகைய கோரிக்கைகள் கண்ணியமாகவும் மரியாதையுடனும் கையாளப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைக்கான காரணத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை, அவ்வாறு செய்வது ஏன் என்று உங்களிடம் விளக்கம் கேட்கவும் கூடாது.

உங்கள் முகக்கவசத்தை அகற்ற நீங்கள் மறுத்து, பணியாளர்களால் உங்கள் புகைப்பட அடையாளத்தைச் சரிபார்க்க முடியவில்லை என்றால், உங்கள் வாக்குச்சீட்டு உங்களுக்கு வழங்கப்படாது, எனவே உங்களால் வாக்களிக்க முடியாமல் போகலாம்.

**எனது அடையாள அட்டையில் உள்ள புகைப்படம் என்னைப் போலவே இருந்தால், வாக்குச் சாவடியில் உள்ள பணியாளர்கள் என்ன முடிவு எடுப்பார்கள்?**

வாக்குச் சாவடி ஊழியர்கள் உங்கள் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள புகைப்படத்தையும், பெயரையும் வாக்காளர் பதிவேட்டில் உங்கள் பெயருடன் பொருந்துகின்றனவா என்று சரிபார்ப்பார்கள். உங்கள் புகைப்படம் அங்கீகரிக்கப்படுமா என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்களின் சமீபத்திய புகைப்படத்துடன் இலவச வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்.

https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/voter-id/applying-a-voter-authority-certificate இல் கூடுதல் தகவல்களைக் காணலாம்

உங்கள் கவலைகள் உங்கள் பாலினத் தோற்றப்பாட்டுடன் தொடர்புடையதாக இருந்தால், வாக்காளர் ஆணையச் சான்றிதழில் ஒரு பாலின அடையாளம் உள்ளடங்காது.

**நான் ஒரு பார்வையற்ற/ பகுதியளவு பார்வையுடைய வாக்காளர் ஆவேன், வாக்குச் சாவடியில் எனக்கு என்ன ஆதரவுகள் உள்ளன?**

தேர்தல்கள் சட்டத்தை (2022) பின்பற்றி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் - தேர்தல்களை மேற்பார்வையிடும் அதிகாரிகள் - ஊனமுற்றவர்களுக்கு சுதந்திரமான மற்றும் இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இப்போது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் ஆணையத்தின் அணுகல் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

பார்வையற்ற மற்றும் பகுதியளவு பார்வையற்ற வாக்காளர்களை ஆதரிக்க, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பின்வருவனவற்றைக் வேண்டும்:

- ஒரு தொட்டுணர் வாக்களிப்புச் சாதனம்
- உசாவுகைக்காக வாக்குச்சீட்டின் பெரிய அச்சு நகல்
- உருப்பெருக்கிகள்
- கூடுதல் விளக்குகள்
- தேவையாயின் வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கும், உங்கள் வாக்கைப் பதிவுசெய்வதற்கு வழிகாட்டுவதற்காக வாக்குச் சாவடிப் பணியாளர்களின் உதவி

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தங்கள் பகுதியில் என்ன தேவை என்பதை எதிர்பார்க்க வேண்டும், மேலும் ஒருவர் சுதந்திரமாகவும் இரகசியமாகவும் வாக்களிக்க ஆடியோ சாதனங்கள் போன்ற கூடுதல் உபகரணங்களை வழங்க முடியும். தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கான தேர்தல் ஆணைய வழிகாட்டுதல் பற்றி https://www.electoralcommission.org.uk/guidance-returning-officers-assistance-voting-disabled-voters/ensuring-voting-accessible/providing-equipment-polling-station-enables-or-makes-voting-easier-disabled-voters. இல் மேலும் படியுங்கள்

**வாக்குச் சாவடியில் நியாயமான சீராக்கத்தை எவ்வாறு கோருவது?**

அன்றைய தினம் வாக்குச்சாவடி ஊழியர்களிடம் நீங்கள் கேட்கலாம், அவர்கள் தங்களால் இயன்ற உதவியை வழங்குவார்கள். உங்களால் முடிந்தவரை விஷயங்கள் சுமுகமாக இருப்பதை உறுதிசெய்ய, உங்கள் உள்ளூர் தேர்தல் அதிகாரிக்கு அல்லது உள்ளூர் தேர்தல் சேவைகளுக்கு நீங்கள் எழுதலாம், சுதந்திரமாக வாக்களிக்க உங்களுக்கு நியாயமான மாற்றங்கள் தேவை என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கலாம். அவர்களின் தொடர்புத் தகவலைக் கண்டறிய, நீங்கள் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information இல் தேர்தல் ஆணையத்தின் அஞ்சல் குறியீட்டு தேடல் கருவியைப் பயன்படுத்தவும் தொடர்பில்

இருப்பதற்கு RNIB இன் டெம்ப்ளேட் அறிவிப்பு கடிதத்தைப் பயன்படுத்தவும் முடியும் https://www.rnib.org.uk/documents/1604/Notification_template_for_individuals_to_send_to_Returning_Officers.docx

பார்வையற்றோர் மற்றும் பகுதியளவு பார்வையற்றவர்கள் வாக்களிக்க மொபைல் ஃபோன் ("Seeing AI" போன்ற செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட உரையைப் படிக்கும்) செயலிகள் அல்லது வீடியோ உருப்பெருக்கி சாதனங்கள் மூலம் நியாயமான முறையில் வாக்களிக்க முடியும் என்பதை தெளிவுபடுத்தும் வகையில் வாக்குச்சாவடி ஊழியர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

**வாக்குச் சாவடியில் எனக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?**

வாக்குச் சாவடியில் ஏதேனும் சிக்கல்களைச் சந்தித்தாலோ அல்லது உங்கள் அனுபவத்தைப் பற்றி கருத்துத் தெரிவிக்க விரும்பினாலோ, உங்கள் உள்ளூர் கவுன்சிலில் உள்ள தேர்தல் சேவைக் குழுவைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் உள்ளூர் தேர்தல் சேவைக் குழுவைத் தொடர்புகொள்ள, உங்கள் அஞ்சல் குறியீட்டை இங்கே உள்ளிடவும் - https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information

## <u>அநாமதேயமாக வாக்களிப்பது</u>

**அநாமதேயமாகப் பதிவு செய்தல் என்றால் என்ன?**

ஒருவர் வாக்களிப்பதற்காகப் பதிவு செய்யும் போது, அவரின் பெயர் மற்றும் முகவரி வாக்காளர் பதிவேட்டில் காட்டப்படும். வாக்காளர் பதிவேட்டில் பெயர் மற்றும் முகவரி இருப்பது தங்களின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தலாம் என்று யாராவது கவலைப்பட்டால், அவர்கள் அநாமதேய வாக்காளராகப் பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம்.

பொதுவாக வாக்காளர் பதிவேட்டில் பதிவுகள் இப்படித்தான் தோற்றமளிக்கும்:
FBC412 Vella, John 59 Green Lane
BC413 Vella, Veronica 59 Green Lane

வாக்காளர் பதிவேட்டில் அநாமதேய பதிவுகள் இப்படித்தான் தோற்றமளிக்கும்:
BC602 N

'N' என்பது இந்தப் பதிவு அநாமதேயமாக பதிவு செய்யப்பட்ட வாக்காளருடன் தொடர்புடையது என்பதைக் குறிக்கிறது. இதன் அர்த்தம், அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்தவர்கள் வாக்களிக்க முடியும், ஆனால் அவர்களின் பெயர் மற்றும் முகவரி வாக்காளர் பதிவேட்டில் இருக்காது என்பதாகும்.

**நான் அநாமதேயமாக பதிவு செய்யலாமா?**

அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்ய விரும்பும் எவரும் செய்ய வேண்டியவை:

- விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்

- தங்களின் விவரங்கள் வாக்காளர் பதிவேட்டில் இருந்தால் தங்களின் பாதுகாப்புக்கு அல்லது தங்களது வீட்டில் உள்ள ஒருவரின் பாதுகாப்புக்கு எவ்வாறு ஆபத்து ஏற்படும் என்பதை விளக்க வேண்டும்
- தங்களின் பதிவுக்கு ஆதரவான சாட்சிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்
- விண்ணப்பப் படிவம், விளக்கம் மற்றும் சாட்சிகளை தங்கள் ஊராட்சி மன்றத்திடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும்

அநாமதேயமாக பதிவு செய்வதற்கான வழிகாட்டியை நீங்கள் பதிவிறக்கலாம், இது Women's Aid நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது https://www.electoralcommission.org.uk/resources/democratic-engagement-resources/supporting-domestic-abuse-survivors-register-vote-anonymously அச்சு விண்ணப்பப் படிவத்தை நீங்கள் இங்கே காணலாம் https://www.electoralcommission.org.uk/sites/default/files/2021-02/Register-to-vote-anonymously-resident-in-England_0.pdf

அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்கள் உள்ளூர் கவுன்சிலை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். அவர்களின் தொடர்பு விவரங்களைக் கண்டறிய, உங்கள் அஞ்சல் குறியீட்டை உள்ளிடவும் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information

**நான் அநாமதேயமாக வாக்களிக்கப் பதிவு செய்துள்ளேன், நான் நேரில் வாக்களிக்கும் முறையை புகைப்பட அடையாளத் தேவை எவ்வாறு மாற்றும்?**

வாக்குச் சாவடியில் நேரில் வாக்களிக்க விரும்பும் அநாமதேய வாக்காளர்கள் தங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாளமாக அநாமதேய வாக்காளர் ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணம் ஒரு தனிநபரின் அடையாளச் சரிபார்ப்பைத் தொடர்ந்து உங்கள் உள்ளூர் வாக்காளர் பதிவு அலுவலர் வழங்கிய ஒரு வாக்காளரின் வாக்காளர் எண்ணையும் புகைப்படத்தையும் கொண்டிருக்கும். ஒரு அநாமதேய வாக்காளர் என்ற முறையில் நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாளத்திற்கான பிற வடிவங்களைப் பயன்படுத்த முடியாது. நேரில் வாக்களிக்கும்போது உங்கள் வாக்காளர் அட்டையையும் அநாமதேய வாக்காளர் ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

அநாமதேயமாக வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்தவர்கள் அல்லது தேர்தலுக்கு முன்னதாக அநாமதேயமாக வாக்களிக்க பதிவு செய்தவர்கள் அனைவரும் **அநாமதேய வாக்காளர் ஆவணத்திற்கு** விண்ணப்பிக்க அவர்களுடைய உள்ளாட்சி மன்றத்தால் அழைக்கப்படுவார்கள். ஒன்றைக் கோர நீங்கள் உள்ளாட்சி மன்றத்தைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் அஞ்சல் குறியீட்டை https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information இல் உள்ளிடுவதன் மூலம் அவர்களின் விவரங்களைக் கண்டறியலாம்

**அநாமதேய வாக்காளர் ஆவணத்திற்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

அநாமதேய வாக்காளர் ஆவணத்திற்கு விண்ணப்பிக்கும் போது, நீங்கள் உங்களின் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும்:

- பெயர்
- முகவரி
- பிறந்த தேதி
- தேசிய காப்பீட்டு எண்

உங்களின் தேசிய காப்பீட்டு எண் உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்களின் ஊதியச் சீட்டுகளில் அல்லது வரி, ஓய்வூதிய அல்லது பலன்கள் பற்றிய அதிகாரப்பூர்வ கடிதங்களில் அதைக் காணலாம். உங்களால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும்,

நீங்கள் உங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யலாம், மேலும் உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க மாற்று அடையாள அட்டை வடிவங்களை வழங்கும்படி கேட்கப்படுவீர்கள், அதில் பிறப்புச் சான்றிதழ், வங்கி அறிக்கை அல்லது பயன்பாட்டு பில் என்பன அடங்கும். உங்கள் தொடர்பு விவரங்களை நீங்கள் வழங்கினால், இதை ஏற்பாடு செய்ய உங்கள் கவுன்சில் உங்களைத் தொடர்பு கொள்ளும்.

உங்களிடம் வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாளச் சான்று இல்லையென்றால், உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க உள்ளூர் கவுன்சிலுக்கு சான்றொப்பம் அளிக்குமாறு உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் கேட்கலாம். யாரால் சான்றளிப்பை வழங்க முடியும் என்பது பற்றிய கூடுதல் தகவலை உங்கள் உள்ளூர் கவுன்சில் வழங்க முடியும். உங்கள் அஞ்சல் குறியீட்டை https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information இல் உள்ளிடுவதன் மூலம் அவர்களின் தொடர்பு விவரங்களைக் கண்டறியலாம்

**அநாமதேய வாக்காளர் ஆவணம் எப்படி இருக்கும்?**

ஒரு அநாமதேய வாக்காளர் ஆவணத்தின் மேல் 'வாக்காளர் ஆவணம்' என்று எழுதப்பட்டிருக்கும், அது அநாமதேயமாக வாக்களிக்கப் பதிவுசெய்யப்பட்ட வாக்காளரின் நிலையைக் காட்டாது.

அநாமதேய வாக்காளர் ஆவணத்தில் பின்வருவன அடங்கும்:

- வழங்கிய தேதி
- உங்கள் புகைப்படம்
- உங்கள் வாக்காளர் எண் (இது உங்கள் பெயர் மற்றும் முகவரிக்கு பதிலாக வாக்காளர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண் ஆகும்)
- பொருத்தமான அடையாளங்காட்டி (இது 20 எழுத்துகள் மற்றும் எண்களின் கலவையாகும், இது தேர்தல் பதிவு அலுவலர்கள் பயன்படுத்தும் மென்பொருளால் உருவாக்கப்படுகிறது)

நீங்கள் அநாமதேய வாக்காளராக இருந்தால், நீங்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது உங்கள் அநாமதேய வாக்காளர் ஆவணத்தைக் கொண்டு வர வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாளயின் கூடுதல் வடிவத்தை உங்களுடன் கொண்டு வரத் தேவையில்லை.

**வாக்குச் சாவடியில் என்ன நடக்கும்?**

அநாமதேய வாக்காளர்கள் தங்களின் வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது தங்கள் வாக்குச்

சீட்டு மற்றும் அநாமதேய வாக்காளர் ஆவணம் ஆகிய இரண்டையும் கொண்டு வர வேண்டும்.

நீங்கள் வரும்போது, ஒரு பணியாளர் உங்களை வரவேற்பார், அவர்:

1. உங்கள் வாக்காளர் அட்டையைக் காட்டுமாறு கேட்பார் - நீங்கள் உங்கள் பெயரையும் முகவரியையும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை 2. பதிவேட்டில் உங்கள் வாக்காளர் எண்ணைக் கண்டறிவார்
3. உங்கள் அநாமதேய வாக்காளர் ஆவணத்தைச் சரிபார்ப்பார்
4. பட்டியலில் உங்கள பெயரை வெட்டி விட்டு, உங்கள் வாக்குச் சீட்டைக் உங்களுக்குக் கொடுப்பார்

உங்கள் அநாமதேய வாக்காளர் ஆவணத்தை நீங்கள் தனிப்பட்ட முறையில் பார்ப்பதற்காக, வாக்குச் சாவடிகளில் ஒரு தனிப்பட்ட பகுதி கிடைக்கும். இது ஒரு தனி அறையாக இருக்கலாம் அல்லது வாக்குச் சாவடியைப் பொறுத்து தனியுரிமைத் திரையால் பிரிக்கப்பட்ட பகுதியாக இருக்கலாம்.

**நான் அநாமதேயமாக பதிவு செய்திருந்தால் நான் நேரில் வாக்களிக்க வேண்டுமா?**

இல்லை, நீங்கள் ஒரு வாக்குச் சாவடியில் நேரில் வாக்களிக்க விரும்பவில்லை என்றால், நீங்கள் தபால் மூலமாகவோ அல்லது பதிலாள் மூலமாகவோ வாக்களிக்க விண்ணப்பிக்கலாம். உங்கள் புகைப்பட ஐடி விண்ணப்பிக்கவோ அல்லது தபால் அல்லது பதிலாள் மூலம் வாக்களிக்கவோ தேவையில்லை. உங்கள் சார்பாக வாக்களிக்க உங்கள் பதிலாள் வாக்குச் சாவடியில் தங்கள் சொந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட ஐடியைக் காட்ட வேண்டும்.

பதிலாள் அல்லது தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் https://www.gov.uk/apply-proxy-vote அல்லது https://www.gov.uk/apply-postal-vote என்ற ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

உங்களால் ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியாவிட்டால், பதிலாள் வாக்கு விண்ணப்ப படிவத்தை https://www.gov.uk/government/collections/proxy-voting-application-forms இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் அல்லது தபால் மூல வாக்கு படிவத்தை https://www.gov.uk/government/publications/apply-for-a-postal-vote இலிருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம் மற்றும் அதை உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பவும், அல்லது விண்ணப்ப படிவத்தை தபாலில் உங்களுக்கு அனுப்புமாறு கோரவும்.

உங்கள் பெருநகர தேர்தல் சேவைகளின் விவரங்களை நீங்கள் https://www.electoralcommission.org.uk/i-am-a/voter/your-election-information இல் காணலாம்.

அநாமதேயமாக வாக்களிப்பது எப்படி என்பது பற்றி மேலும் அறிய, https://www.electoralcommission.org.uk/voting-and-elections/ways-vote/how-vote-anonymously. இல் சரிபார்க்கவும்.

## <u>சட்ட மற்றும் டிஜிட்டல் முத்திரைகள்</u>

**சட்ட மற்றும் டிஜிட்டல் முத்திரைகள் என்றால் என்ன?**

சட்ட (அச்சிடப்பட்ட பொருட்கள்) மற்றும் டிஜிட்டல் (டிஜிட்டல் பொருட்கள்) முத்திரைகள் பிரச்சாரம் மற்றும் அரசியல் பொருட்களை வெளியிடுவதற்கு யார் பொறுப்பு மற்றும் அவர்கள் யாரிற்காக அதை விளம்பரப்படுத்துகிறார்கள் என்னும் வெளிப்படைத்தன்மையை

வழங்குகின்றன (அதாவது யார் பணம் செலுத்தியது) . எனவே, யார் உங்களுக்குத் தெரியப்படுத்தஅல்லது செல்வாக்கு செலுத்த முயற்சிக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், முத்திரையை நீங்கள் சரிபார்க்கலாம்.

எங்கள் சமூக விநியோக பங்குதாரர் மற்றும் மானியம் பெறுபவர்களுடன் நாங்கள் பயன்படுத்தும் முத்திரை வார்ப்புருவின் எடுத்துக்காட்டு இங்கே:

"கிரேட்டர் லண்டன் ஆணையம், சிட்டி ஹால், கமல் சுஞ்சி வே, லண்டன் E16 1ZE ஆல் ஆதரிக்கப்படுகிறது. [அமைப்பின் பெயர்], [நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி] மூலம் அச்சிடப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது."

முத்திரைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://www.electoralcommission.org.uk/imprints

## வாக்காளர்களால் மேலும் அணுகக்கூடிய பொருட்கள் மற்றும் பிற வளங்கள்

### வாக்காளர் பதிவு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை குறித்த அணுகத்தக்க மூலவளங்களை நான் எங்கு காணலாம்??

ஒவ்வொரு ஆண்டும், GLA மின்னணு மற்றும் அச்சு மூலவளங்களை இலண்டன் சமூகத்தில் பரவலாக அறியப்பட்ட மொழிகளில் உருவாக்குகிறாது. நீங்கள் அவற்றை https://registertovote.london/. இல் GLA ஜனநாயக மையத்தில் காணலாம். காது கேளாதோர் மற்றும் ஊனமுற்ற இலண்டன்வாசிகளுக்கான ஆதாரங்களையும் நீங்கள் காணலாம்.

தேர்தல் ஆணையம் அதன் சொந்த ஐக்கிய இராச்சிய வாரியான தகவல்களையும் வழங்குகிறது. அவற்றை நீங்கள் https://www.electoralcommission.org.uk/ இல் அணுகலாம்.

### டிரான்ஸ் மற்றும் பைனரி அல்லாத வாக்காளர்களுக்கான கூடுதல் தகவல்களை நான் எங்கே காணலாம்?

GLA வாக்காளர் அடையாள பிரச்சார மானியத் திட்டத்தின் கட்டம் 1-க்கான ஒரு மானியம் பெறுநர் என்ற வகையில், LGBT Hero ஆனது டிரான்ஸ் மற்றும் பைனரி அல்லாத வாக்காளர்களுக்கான குறிப்பான வளங்கள் உட்பட LGBTQIA+ சமூகங்களுக்கான வளங்களைக் கொண்ட வாக்காளர் அடையாள மையத்தை உருவாக்கியுள்ளது. அவற்றை நீங்கள் இங்கே காணலாம்
https://www.lgbthero.org.uk/pages/category/lgbtq-photo-voter-id-london-elections

### மற்ற சமூகங்களை - குறிப்பான தகவல்கள் மற்றும் ஆதாரங்களை நான் எங்கே காணலாம்?

டிராவலர் இயக்கமும் GLA வாக்காளர் அடையாள அட்டை சமூக மானியம் பெறுநராக இருந்தது, மேலும் ஜிப்சி, ரோமா மற்றும் டிராவலர்ஸ் என்பவற்றுன் வளங்களை நீங்கள் இங்கே காணலாம் https://travellermovement.org.uk/operation-traveller-vote

பிரிட்டனின் முஸ்லிம் கவுன்சில் சில வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளதுடன் அதனை இதில் காண முடியும்

https://mcb.org.uk/local-elections-2023-voter-id-and-face-coverings/

கட்டம் 2 GLA மானியதாரராக, நியூ ஐரோப்பியர்கள் இங்கிலாந்து ஐரோப்பிய ஒன்றிய லண்டன்வாசிகள் தங்கள் ஜனநாயக உரிமைகளை வழிநடத்துவதற்கு ஆதரவளிக்க பல்வேறு சமூக மொழிகளில் பக்கச்சார்பற்ற வளங்களை உருவாக்கியுள்ளனர்இவை https://neweuropeans.uk/voter-id-awareness/ இல் காணப்படுகிறது.

**நான் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?**

GLA ஒருங்கிணைக்கும் வாக்காளர் அடையாள அட்டை பொது விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் வருடாந்திர இலண்டன் வாக்காளர் பதிவு வாரம் தொடர்பான அனைத்து தளவாடங்களும் நடவடிக்கையும் முழுக்கவே பாரபட்சமில்லாத கட்சி அரசியல் சாராத ஒன்று. GLA-வோ Shout Out UK-வோ எந்த அரசியல் கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ ஆதரவளிப்பதாகக் கருதக்கூடாது. அதேபோல, இலண்டன்வாசிகள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்ற அபிப்பிராயங்களையும் நாங்கள் பகிர்வதில்லை.

உங்கள் சாத்தியமான உள்ளூர் அல்லது தேசிய பிரதிநிதிகளைப் பற்றி அறிந்துகொள்வது மற்றும் உங்களையும் உங்கள் நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்த விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானிப்பதே, வாக்களிக்க பதிவு செய்வது மற்றும் வாக்களிக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட ஐடி உங்களிடம் இருப்பதை உறுதிசெய்வது பற்றிய அற்புதமான விஷயங்களில் ஒன்று ஆகும். நீங்கள் உங்கள் சொந்த ஆய்வை இங்கே செய்யலாம் https://whocanivotefor.co.uk/ இல் ஆராய்ச்சி செய்து தீர்மானத்திற்கு வரலாம்.

நினைவில் கொள்ளுங்கள், உங்கள் வாக்கு உங்கள் குரலாகும், உங்கள் குரல் முக்கியமானது! #NoVoteNoVoice